மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

A Study of Kinship in Tamil Proverbs

M.I. Fathima Safna

Lecturer, Department of Languages, Faculty of Arts and Culture, South Eastern University, SriLanka

Manuscript ID : **MT375A0165**

Volume : **4**

Issue : **2**

Month : **June**

Year : **2024**

Received: 26.04.2024
Revised: 17.05.2024
Accepted: 29.05.2024
Published: 20.06.2024

Pages : 08-16

DOI: 10.5281/zenodo.12165759

ABSTRACT:

Among the classical languages, Tamil is one of the oldest languages. We know that this Tamil language has a long literary history in itself. Leaving an indelible mark on the history of oral literature before the history of written literature; In today's modern world, many literatures have been created; Tamil language has got special merit.

Proverbs occupies a very important place in the oral literature that emerged from the life of the common people. Proverbs speak many things. Thus many proverbs are found based on social relations. They give many instructions and guidelines to the society both materially and figuratively. Along with that, some proverbs can be seen as humorous. So far no research efforts have been made regarding proverbs based on such social relations. This review has been carried out to resolve the deficiency. The main objective of this study is to introduce proverbs based on relationships. Also, the purpose of this study is to clarify the figurative and content aspects of the proverbs. Descriptive, comparative and linguistic approaches have been used in this study.

KEYWORDS:

Tamil, Proverbs, Relationships

தமிழ்ப் பழமொழிகளில் உறவுமுறைகள் - ஓர் ஆய்வு

எம்.ஐ. பாதிமா சப்னா
விரிவுரையாளர்,
மொழித்துறை, கலை கலாசார பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கட்டுரைச் சுருக்கம்

செம்மொழிகளில் தமிழ் பழமையான மொழிகளில் ஒன்று. இந்தத் தமிழ் மொழிக்கு நீண்ட இலக்கிய வரலாறு உண்டு என்பதை நாம் அறிவோம். எழுத்து இலக்கிய வரலாற்றுக்கு முன் வாய்மொழி இலக்கிய வரலாற்றில் அழியாத தடம் பதித்து; இன்றைய நவீன உலகில் பல இலக்கியங்கள் படைத்து; தமிழ் மொழி சிறப்பு பெற்றுள்ளது.

சாமானியர்களின் வாழ்விலிருந்து தோன்றிய வாய்மொழி இலக்கியங்களில் பழமொழிகள் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. பழமொழிகள் பலவற்றைப் பேசுகின்றன. இவ்வாறு பல பழமொழிகள் சமூக உறவுகளின் அடிப்படையில் காணப்படுகின்றன. அவர்கள் சமுதாயத்திற்கு பொருள் மற்றும் உருவகமாக பல அறிவுரைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்குகிறார்கள். அதோடு சில பழமொழிகளும் நகைச்சுவையாகக் காணப்படுகின்றன. இத்தகைய சமூக உறவுகளின் அடிப்படையில் பழமொழிகள் குறித்து இதுவரை ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. குறைபாட்டை தீர்க்க இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் முக்கிய நோக்கம் உறவுகளின் அடிப்படையில் பழமொழிகளை அறிமுகப்படுத்துவதாகும். மேலும், இந்த ஆய்வின் நோக்கம் பழமொழிகளின் உருவக மற்றும் உள்ளடக்க அம்சங்களை தெளிவுபடுத்துவதாகும். இந்த ஆய்வில் விளக்கமான, ஒப்பீட்டு மற்றும் மொழியியல் அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கருச்சொற்கள்

தமிழ், பழமொழிகள், உறவுகள்.

முன்னுரை

கிராம மக்களின் பண்பாட்டையும், வழக்காறுகளையும், சமய நெறிகளையும், கலைகளையும், இலக்கியங்களையும் ஆராயும் கற்கை நெறியே நாட்டுப்புறவியல்.

“மரபு வழியில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு பண்பாட்டின் எதிரொலிகளாக வாழ்ந்து வரும் நாட்டுப்புற மக்களின் நாவில் நளினமாகத் தவழ்ந்து நகர்ப்புறத்தாரையும் தன்பால் ஈர்க்கும் காந்தமாக விளங்குவதே நாட்டுப்புற இலக்கியம்”

என்றும் நாட்டுப்புற இலக்கியத்தை வரையறை செய்யலாம். மரபு வழிப்பட்ட வாய்மொழி வழக்காறுகள் பல கிளைகளைக் கொண்டவை. அவற்றின் ஒரு பகுதியே பழமொழிகள். பழமொழிகள் பாமர மக்களின் அனுபவ அறிவில் தோன்றியவையாகும். பழமொழிகளை சூழலில் காணப்படும் கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வாறான பழமொழிகள் ஒவ்வொரு பொருளின் தன்மையில் உருவாக்கப்பட்டாலும் அவற்றின் உள்ளார்ந்த கருத்துக்கள் ஆழமானதாகக் காணப்படுகின்றன.

சமூகத்தில் தனி மனிதனாக வாழ்வது மிகவும் கடினமானது. ஒவ்வொரு மனிதரும் குடும்பம் எனும் நிறுவனத்தோடு சார்ந்தே வாழ்கின்றனர். உறவுகள் சமூகத்தில் முக்கிய அம்சமாக விளங்குகின்றன. ஒரு குடும்பத்தை எடுத்தால் அம்மா-அப்பா, அண்ணன்-தம்பி, அக்கா-தங்கை, மாமி-மருமகள், கணவன்-மனைவி, தாய்-பிள்ளை, தந்தை-பிள்ளை என பல்வேறு உறவுகள் காணப்படுகின்றன. இந்த உறவுகளைக் கருப்பொருளாகக் கொண்டு பல இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அந்தவகையில் குடும்ப உறவுகளை மையமாகக் கொண்டு நாட்டார் இலக்கியங்களும் உருவாகியுள்ளன. அதனடிப்படையில் பாமர மக்கள் வாழ்விலிருந்து சமூகத்திற்கு அறிவுரையாகவும் படிப்பினையாகவும் இருக்கும் பழமொழிகளும் குடும்ப உறவுகளை கருப்பொருளாகக் கொண்டு எழுந்துள்ளன. உறவின் ஆழத்தை உணர்த்தக்கூடிய சில பழமொழிகளும், உறவுகளை வைத்து ஏனைய விடயங்களைத் தெளிவுபடுத்தும் வகையில் சில பழமொழிகளும் அமைந்துள்ளதை அவதானிக்க முடியும்.

தாய் - பிள்ளை உறவு

‘தாயின் பாதத்தின் கீழ் சுவர்க்கம் உண்டு’ என்பது ஹதீஸ். இந்த ஹதீஸ் தாயின் சிறப்பைக் எடுத்துக்காட்டுகின்றது. தாய் - பிள்ளை உறவு மிகவும் நெருக்கமான, வழுவான உறவாகும். இந்த உறவு நிலையை வைத்து பல பழமொழிகள் எழுந்திருப்பதை அவதானிக்கலாம்.

“தாயப் போல பிள்ளை நூலப் போல சேலை”

“நாய்த் தோளானாலும் தாய்த் தோல்”

“காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு”

"தாய் எட்டடி பாய்ந்தால் புள்ள பதினாறடி பாயும்"

"குதிரை எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும்"

இப்பழமொழிகள் ஒவ்வொன்றும் பல்வேறு பொருள்களில் எழுந்தவை. எனினும் தாய் - பிள்ளை முதலிய உறவுகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டிருப்பதை அவதானிக்கலாம்.

"தாயும் புள்ளயும் என்றாலும் வாயும் வயிறும் வேறு"

என்ற பழமொழி தாய் - பிள்ளை உறவை எடுத்துக்காட்டினாலும் ஒரே இரத்தத்தில் பிறந்தவர்களாக இருந்தாலும் இருவரது உணர்வுகள் வேறுபட்டவை என்பதனையே கூறுகின்றது.

சிங்களத்திலும் தாய் - பிள்ளை உறவு பற்றியும் அதன் ஆழம் பற்றியும் பழமொழிகளில் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. பிள்ளைப் பாசத்தினால் பிரசவ வேதனை கூட, ஒரு தாய்க்கு சுகமானதாக அமைந்து விடுகின்றது எனக் கூறுவதுண்டு. இதன் மூலம் தாய் - பிள்ளை உறவின் சிறப்பும், தாயின் மகிமையும் எடுத்தியம்பப்படுகின்றது.

அதேவேளை, தாய் - பிள்ளை பாசம் இல்லாத போது, அதன் கொடுமையையும் தமிழ்ப் பழமொழிகள் உணர்த்தத் தவறவில்லை. சில இடங்களில் பெற்றோர் பிள்ளைகளுக்காக ஏங்குவதையும் பிள்ளைகள் எந்தவொரு உணர்வும் இன்றி கல்லானவர் போல் பிடிவாதமாக இருப்பதை வெளிக்காட்டுவதாக,

"பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு"

எனும் பழமொழி அமைந்துள்ளது.

சமூகத்தில் சிலர் திருமணமான பின்னர் தனது தாயை மதிக்காது, மனைவியின் பேச்சைக் கேட்டு, மனைவிக்கே முதலிடம் கொடுத்து, தாயை அவமதித்து நடப்பர். தாயை விட, தாரத்தை மேலாகக் கருதுவதை விளக்குவதாக,

"முதல் வந்த காதைவிட பிறகு வந்த கொம்பு பெரிதாம்"

எனும் பழமொழி அமையப் பெற்றுள்ளது. இப்பழமொழி ஒரு கதையை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. மரையொன்று அதற்கு முதலில் இருந்த காதுக்குப் பின்னால் அழகாகவும் பெரிதாகவும் கொம்பு வந்ததும் தற்பெருமையில் காட்டுக்குள் ஓடியது. ஆயினும் அதன் அழகிய கொம்பு செடி, கொடிகளில் சிக்கி அம்மரையை ஆபத்தில் மாட்டிவிட்டது. எனவே தாயை மதிக்காமல் ஒருவன் நடந்து கொண்டால் அவன் வாழ்க்கையில் பிரச்சினைகளுக்கு உட்பட்டு நிம்மதியற்று வாழ்வான் என்பதனையே இது உணர்த்துகின்றது.

தந்தை - பிள்ளை

'தாயிற் சிறந்த கோயிலுமில்லை, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்பது முதுமொழி. தந்தையின் வழிகாட்டல் பிள்ளைகளுக்கு இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. பொதுவாக பெற்றோரின் வழி நடாத்தலில் பிள்ளைகள் வளர்கின்றனர். பெற்றோரது நல்ல தீய பண்புகள் பிள்ளையிலும் ஆதிக்கம் செலுத்துவதைக் காணலாம். இதனை உணர்த்துவதாகவே பழமொழி அமைந்துள்ளது.

பெரும்பாலும் தந்தையை அடியொட்டி தந்தை செய்கின்ற நல்ல செயல்களை மகனும் செய்வதை சமூகத்தில் காண முடிகின்றது. இவ்வாறு இல்லாத போது சமூகத்தில் அவனின் பிறப்பை வித்தியாசமாகப் பார்ப்பர். இதனை உணர்த்துவதாக,

"அப்பன் செய்ததை மகன் செய்யாவிட்டால் அவன் தொட்டியின் மகன்"

"தந்தை எவ்வழி அவ்வழி புதல்வன்"

எனும் பழமொழிகள் அமைந்துள்ளன. அதேபோல், தந்தையின் பெருமை பற்றியும் பழமொழிகள் கூறப்பட்டுள்ளன.

"அப்பனின் அருமை அப்பன் மாண்ட பிறகு தெரியும்"

இப்பழமொழி எந்த ஒன்றினதும் அருமை அது இல்லாமல் சென்ற பிறகுதான் தெரியும் என்பதனை உணர்த்தினாலும் நேரடிப் பொருளில் தந்தையின் அருமையை தெளிவுபடுத்துகின்றது. தந்தை உயிர் வாழும் போது, சில குடும்பங்களில் மனைவியும் பிள்ளைகளும் தந்தையைக் கணக்கெடுப்பதில்லை. கவனிப்பதும் இல்லை. காலடியில் இருக்கும் போது அவர் குடும்பத்திற்காக எவ்வளவு கஷ்டப்படுகின்றார் என்பதனை புரிந்து கொள்வதில்லை. எடுத்ததற்கெல்லாம் தந்தைக்கு ஏசுவதும், சண்டை பிடிப்பதையும் சில குடும்பங்களில் காண முடிகின்றது. இக்குடும்பங்களில் அப்பன் திடீரென இறந்துவிட்டால் தான், தாயும் பிள்ளைகளும் தந்தையின் அருமையை உணர்கின்றனர். இதனைப் புலப்படுத்துவதாகவே இப்பழமொழி அமைந்துள்ளது.

மாமி - மருமகள்

மாமி - மருமகள் உறவு பொதுவாக சமூகத்தில் ஆரோக்கியமற்ற ஒரு உறவாகவே பார்க்கப்பட்டு வந்திருப்பதை பழமொழிகளும் உணர்த்துகின்றன. மாமி-மருமகள் பிரச்சினைகள் சமூகத்தில் பரவலாகப் பேசப்படும் ஒரு அம்சமாகும். இதன் வெளிப்பாடுகளாக கீழ்வரும் பழமொழிகள் அமைந்திருப்பதை அவதானிக்கலாம்.

"மாமி உடச்சா மட்குடம் மருமகள் உடச்சா பொற்குடம்"

மாமி எப்போதும் சமூகத்தில் வில்லி போலவும் மருமகள் எப்போதும் அடங்கிப் போக வேண்டிய பாத்திரமாகவும் காட்டப்படுவதை இது தெளிவுபடுத்துகின்றது. இதன் மூலம் மாமி - மருமகள் உறவின் ஆரோக்கியமற்ற தன்மை தெளிவுபடுத்தப்படுகின்றது. மாமி எந்த விடயத்திலும் மருமகளுக்கு அனுபவிக்கக் கொடுக்க மாட்டார். ஒரு வில்லியைப் போல் அதிகாரத்துடன் நடந்து கொள்வாராயின் மருமகளால் எதனையும் குடும்பத்தில் சாதிக்க முடியாது என்பதையே இது சித்தரிக்கின்றது.

சில குடும்பங்களில் மருமகள் எது செய்தாலும் மாமிக்கு குற்றமாகவே இருக்கும். அது நல்ல விடயமாக இருந்தாலும் அதிலும் ஏதாவது குறையை கண்டுபிடித்து குறை கூறுவார். இதனை எடுத்தியம்புவதாகவே,

“அன்பற்ற மாமிக்கு கும்பிடுவதும் குற்றம் தான்”

எனும் பழமொழி அமைந்துள்ளது. இப்பழமொழியில் ‘கும்பிடுதல்’ என்பது அவர்களை வரவேற்று உபசரித்தல் எனப் பொருள்படுகின்றது. பொதுவாக சமூகத்தில் ஆணவம் பிடித்தவர்களுக்கு மற்றவர்கள் செய்யும் அனைத்துச் செயலும் குற்றமாகவே காணப்படும். அதனால் அவர்களை மதித்து அடிபணிவதும் குற்றம் என்பதை இப்பழமொழி தெளிவுபடுத்துகின்றது.

கணவன் - மனைவி

கணவன் - மனைவி உறவு ஒரு குடும்பத்தில் ஆரோக்கியமானதாக இருந்தால் தான் அந்தக் குடும்பம் மகிழ்ச்சிகரமான நல்ல குடும்பமாக அமையும். கணவன்-மனைவி உறவுகளில் விரிசல்கள் ஏற்படுமாயின் அதன் மூலம் குடும்பமே சீரழிந்து போவதைக் காணமுடியும். அவர்களுக்கிடையே அன்பும் புரிந்துணர்வும் மிகவும் இன்றியமையாதன.

“தேனும் பாலும் போல”

எனும் தமிழ்ப் பழமொழி அந்யோன்யமான கணவன் - மனைவி உறவை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளன. மேலும் இப்பழமொழி புரிந்துணர்வான நெருக்கிய உறவுகளையும் நட்புகளையும் சுட்டிக்காட்டுகின்றது.

குடும்பத்தில் விட்டுக் கொடுப்புக்களுடன் செயற்படும் போது பிரச்சினைகள் சுமுகமாக தீர்ந்து விடுகின்றன. பொதுவாக கணவன் - மனைவிக்கு இடையிலான பிரச்சினைகள் தற்காலிக ஊடலாகவே அமையும். அவை, சற்று நேரத்தில் தீர்ந்து விடக் கூடியவை என்பதனைப் புலப்படுத்தும் வகையில் அமைந்ததே பின்வரும் பழமொழிகள்,

“கணவன் மனைவி சண்டை சோற்றுப் பானை பொங்கும் மட்டும்”

அமையப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேபோல், கணவன் - மனைவிக்கிடையே புரிந்துணர்வற்ற நிலை காணப்படுமாயின் அவர்களுக்கிடையே ஏற்படும் சிறிய பிரச்சினைகளும் பெரிய பிரச்சினைகளாகவே தென்படும் என்பதனை,

"வேண்டாத பொண்டாட்டி கால் பட்டாலும் குத்தம் கைபட்டாலும் குத்தம்"

எனும் பழமொழி சித்திரித்துக் காட்டுகின்றது.

"கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்"

எனும் பழமொழி கணவனை மேன்மைப்படுத்துவதாய் அமைந்துள்ளது. அதேவேளை, சமூகத்தில் கணவனுக்குள்ள அந்தஸ்தினையும் பறைசாற்றி நிற்கின்றது.

அதேவேளை, கிராம மக்கள் மத்தியில் பலதார திருமணப் பண்பாடு காணப்பட்டுள்ளது. எனினும் அவ்வாறு இரு திருமணங்களை முடித்தவர்களின் நிலைபற்றிய விமர்சனமாக பல பழமொழிகள் தோற்றம் பெற்றுள்ளன,

"இரண்டு பொண்டாட்டிக்காரன் பாடு திண்டாட்டம்"

எனும் பழமொழி இவ்வகையில் அமைந்ததே. இப்பழமொழி இரண்டு திருமணங்களை முடித்தவர்கள் அனுபவிக்கின்ற கஷ்டங்களை கருத்தில் கொண்டே எழுந்துள்ளது. இரு பொண்டாட்டிக்காரன் இரு மனைவியரையும் ஒழுங்காகப் பராமரிக்கத் தவறும் பட்சத்தில் இரு புறத்தாலும் பாதிக்கப்படுவான். ஒரு குடும்பத்தை பராமரிக்கவே திண்டாடும் இக்கால கட்டத்தில், இரண்டு திருமணம் முடித்து இரு குடும்பங்களையும் பராமரிப்பது மிகவும் சிரமமான காரியம் என்பதை முன்னுணர்ந்து கூறியது போல் இப்பழமொழி அமைந்துள்ளது.

"உரலுக்கு ஒருபக்கம் அடி.
மேளத்துக்கு இரண்டு பக்கமும் அடி"

இரண்டு திருமணம் முடித்தவர்கள் "இருதலைக் கொல்லி எறும்பு போல" இரு புறத்தாலும் பாதிக்கப்படுவதோடு இரு மனைவியரையும் திருப்திப்படுத்துவதிலேயே அவர்களது பாடு போய்விடும் என்பதனை உணர்த்துவதாகவே இப்பழமொழி அமைந்துள்ளது.

அண்ணன் - தம்பி

அண்ணன்-தம்பி உறவும் குடும்பத்தில் மிக முக்கியமான உறவாகக் காணப்படுகின்றது. அண்ணன்-தம்பி உறவுகள் பெரும்பாலும் உழைக்கும் வரை அல்லது திருமணம் முடிக்கும் வரை தான், சீராக இருப்பதனை கண்டுகொள்ள முடியும்.

எனினும், ஒருசில குடும்பங்களில் புரிந்துணர்வும் அன்பும் மேலோங்கி இவ்வுறவு நெருக்கமானதாகவும் காணப்படுகின்றது. இருந்தபோதும், அதிகமான குடும்பங்களில் திருமணம் முடித்த பிறகும், சொத்துக்கள் பகிரப்படும் போதும், உழைக்கும் போதும் இந்த உறவில் பல்வேறு விரிசல்கள் ஏற்படுவதைக் காணமுடியும். இதனைப் புலப்படுத்துவதாகவே,

“ஆத்தக் கடக்கும் வரை தான் அண்ணன் தம்பி”

என வரும் பழமொழி அமைந்துள்ளது.

அதேவேளை, சுமுகமான முறையில் அண்ணன்-தம்பி உறவு காணப்படுமாயின், ஒருவருக்கு ஒரு துன்பமோ கஷ்டமோ என்றால் ஏனைய சகோதரர்கள் பார்த்திருக்க மாட்டார்கள். உடனே உதவி செய்பவர்களாக இருப்பர்கள். தமக்கிடையில் நல்ல உறவு கிடையாத போதும் மூன்றாம் நபர்; மத்தியில், தமது இரத்த உறவை விட்டுக் கொடுத்து, அமைதி காக்கவும் மாட்டார்கள். சகோதரர்களுக்கு நடக்கும் அநியாயத்தை தட்டிக் கேட்டபார்கள். இதனை விளக்குவதாகவே

“தானாடாவிட்டாலும் தன் தசை ஆடும்”

எனும் பழமொழி அமைந்துள்ளது. இவ்வாறு அண்ணன்-தம்பி உறவு தொடர்பாக பல தமிழ் சிங்களப் பழமொழிகள் எழுந்துள்ளன.

அயலார் உறவு

ஒரு தனியாள் அல்லது ஒரு குடும்பம் தனித்து வாழ்வது கடினம். குறிப்பாக கிராம மக்கள், அண்டை அயலவர்களுடன் நெருக்கமான உறவை வைத்திருப்பர். இரத்த உறவுகள் போலவே அயலவர்களும் சமூக வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். குடும்பங்கள் விரிவடையும் போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு பகுதியில் போய் குடியேறி வாழ்வதுண்டு. அவ்வாறான நிலையில் முக்கிய நிகழ்வுகளின் போதுதான் அவர்கள் சந்திப்பதும் உறவாடுவதுமாக இருப்பதை இன்று காண முடியும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அயலவர்கள் தான் எல்லா விடயங்களிலும் உறுதுணையாக அமைகின்றனர். அதனால் அயலவர்களுடனான நல்லுறவைப் பேணுவது மிகவும் இன்றியமையாததாக விளங்குகின்றது.

குடும்பத்தினர் எவ்வளவு வசதியானவர்களாக, உதவி மனப்பான்மை கொண்டவர்களாக இருந்தாலும் அவர்கள் தூரத்தில் வாழ்பவர்களாயின் அவசர நேரங்களில் அவர்களுடைய உதவியைப் பெறுவது சாத்தியமாகாது. இச்சந்தரப்பத்தில் அயலவர்களே உதவுவர். இந்நிலையைப் புலப்படுத்துவதாகவே,

“தூரத்துத் தண்ணீர் தாகத்திற்கு உதவாது”

எனும் பழமொழி அமைந்துள்ளது. இப்பழமொழி மிகவும் ஆழ்ந்த தத்துவத்தினை உணர்த்தி நிற்பதைக் காணலாம்.

அதேபோல் அயல்வீட்டாருடன் உறவுகளை நல்ல முறையில் பேணிக் கொண்டாலும் திருமண சம்பந்தங்கள் செய்வது பொறுத்தமற்றது என்பதை உணர்த்துவதாக ஒரு பழமொழி அமைந்துள்ளது.

“அடுத்தவீட்டு சம்பந்தமும் அடுத்த வீட்டுக் கோழியும் சரிவராது”

கிராம மக்களைப் பொருத்தவரை கிராமத்திற்குள்ளேயே அதிகமான திருமண சம்பந்தங்களை வைத்துக் கொள்வது மரபு. அடுத்த வீடு எனும் போது, அனைத்து விடயங்களும் ஒருவருக்கொருவர் தெரிந்தே இருக்கும். அவ்வாறான நிலையில் உயர்வு தாழ்வு பாராட்டுவது சிரமமான விடயம். பொதுவாக சமூகத்தில் மணமகன் தரப்பினர் சற்று அந்தஸ்து கூடியவர்கள் போல் நடந்து கொள்வது வழக்கம். பக்கத்து வீட்டில் சம்பந்தம் செய்து கொண்டால் இவ்வாறான விடயங்களை பேணிக் கொள்வது சிரமம். இதனால் மாமியார் மருமகள் உறவுக்கிடையில் இடர்பாடுகள் ஏற்படும். இதனையே இப்பழமொழி உணர்த்துகின்றது.

மேலும் குடும்ப உறவினர்கள் எவ்வாறு நடந்து கொண்டாலும் அவர்களை கிராம மக்கள் ஒருபடி மேலாகவும் மற்றவர்களை ஒருபடி கீழாகவும் வைத்து நோக்கும் மரபு காணப்படுகின்றது. அயலவர்கள், நண்பர்கள், அறிமுகமானவர்கள் குடும்ப அங்கத்தவர்களை விட, பல்வேறு வகையிலும் உதவிகள் செய்வோராகக் காணப்படுவர். எனினும் அவர்கள் குடும்ப அங்கத்தவர்களின் அந்தஸ்தில் நிற்க முடியாது என்றே கிராம மக்கள் கருதியிருப்பதை,

“அகத்தி ஆயிரம் காய்ச்சாலும் அகத்தி அகத்தி தான்
பொறத்தி பொறத்தி தான்”

எனும் பழமொழி எடுத்தியம்புகின்றது. ‘அகத்தி’ குடும்ப அங்கத்தவர்களையும் ‘பொறத்தி’ எனும் சொல் ஏனையோரையும் குறித்து நிற்கின்றன. குடும்ப அங்கத்தவர்கள் எவ்வளவு முரண்பட்டுக் கொண்டாலும் அவர்களது உறவு தனித்துவமானது என்பதனையே இப்பழமொழி எடுத்தியம்புகின்றது.

முடிவுரை

இவ்வாறு உறவுகளுக்கிடையிலான சுமூகமான தன்மையையும் முரணான இயல்பையும் பழமொழிகள் எடுத்துக் கூறுகின்றன. சில பழமொழிகள் குடும்ப உறவுகளை அடிப்படையாகக் கொண்டு மக்களுக்கு அறிவுரையாகவும் அமையப் பெற்றுள்ளன. மேலும் சில உறவுகளின் கூடாத தன்மையை சுட்டிக்காட்டி அவ்வாறான உறவுகளை விட்டு விலகி சமூகத்தில் சிறந்த முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்றும் கூறுகின்றன. அத்தோடு மனிதர்கள் தனித்து வாழ்வதை விட குடும்ப உறவுகளோடு மற்றும் அயலவர்களோடு ஒற்றுமையாக வாழ்ந்தால் சமூகத்திற்கும் நாட்டிற்கும் சிறப்பானது என்பதையும் பழமொழிகளினூடாக எடுத்தியம்புவதை அவதானிக்கலாம்.

பாமர மக்களின் வாழ்க்கை அனுபவத்திலிருந்து உருவாகின்ற இப்பழமொழிகள் மக்களை நல்வழிப்படுத்துவதாகவே அமையப் பெற்றுள்ளதைக் காணலாம். அனைத்து சமயங்களிலும் குடும்ப உறவுகளை பேணிக் கொள்ளுமாறே போதிக்கின்றது. தமிழ் - சிங்கள சமூகங்களுக்கு மத்தியில் காணப்படும் உறவுகள் தொடர்பான பல பழமொழிகள் அதற்கு சான்றாக அமையப் பெற்றுள்ளன.

துணைநூற்பட்டியல்

1. சு, சக்திவேல். *நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம்*. தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம், 1996.
2. எஸ் எ, சுலைமான். *பழமொழி ஆயிரம்*. சென்னை, சுலைமானியாபப்ளிஷர்ஸ், 1968.
3. தம்பிஜயா தேவதாஸ். *சிங்களப் பழமொழிகள்*. கொழும்பு, வித்தியாதீபம், 2005.
4. எஸ், முத்துமீறான். *இலங்கைகிராமத்து முஸ்லிம் பழமொழிகள்*. சென்னை, நேஷனல் பப்ளிஷர்ஸ், 2005.
5. எஸ் எச் எம், ஜெமீல். *கிராமத்து இதயம்*. இலங்கை, முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி, 2008.
6. ஜெனரல். *தமிழ்ப் பழமொழிகள்*. தொகுதி 1, சென்னை, ஜெனரல் பப்ளிஷர்ஸ், 2006.

REFERENCES

1. C, Sakthivel. *An Introduction to Folklore*. Thanjavur, Tamil University, 1996.
2. S A, Sulaiman. *Thousand Proverbs*. Chennai, Sulaimaniya Publishers, 1968.
3. Thambijaya Devdas. *Sinhala Proverbs*. Colombo, Vidhyadeepam, 2005.
4. S, Muthumiran. *Village Muslim Proverbs in Sri Lanka*. Chennai, National Publishers, 2005.
5. S H M, Jemeel. *The Heart of the Village*. Sri Lanka, Muslim Women's Research Front, 2008.
6. Jeneral. *Tamil Proverbs*. Volume 1, Chennai, General Publishers, 2006.